# தூறல்

வெளியீடு
சமூகவிஞ்ஞான மன்றம்
யா/இணுவில் மத்திய கல்லூரி
இணுவில்.





தூறல் – 01 | பங்குனி – 2015 | விலை – 20/= | துளி – 02


## உலகில் மிக உயரமானது

1. உலகில் உயரமான மலைச்சிகரம் : எவரெஸ்ட்
2. உலகில் உயரமான ஏரி : டிடிகா
3. உலகில் மிக உயரமான மலைத்தொடர் : இமயமலைத்தொடர்
4. உலகில் மிக உயரமான பீடபூமி : திபெத்
5. உலகில் உயரமான மசூதி : ஜீம்மா மசூதி
6. உலகில் உயரமான கட்டிடம் : தைபே
7. உலகில் உயரமான விலங்கு : ஒட்டகச்சிவிங்கி
8. உலகில் உயரமான சிலை : கர்நாடக சோமதீஸ்வரர்
9. உலகில் உயரமான தீபகற்பம் : இந்தியா
10. உலகில் உயரமான இடத்தில் இருககும் நாடு : திபெத
11. உலகில் உயரமான பாலம் : வெராஸானோநேரோல்
12. உலகில் உயரமான எரிமலை : கொடபக்ஸி
13. உலகில் உயரமான அணை : நூரக்
14. உலகில் உயரத்திலுள்ள நகரம் : வென்சுவான்
15. உலகில் உயரமான ஒற்றை இரும்புக் கோபுரம் : ருதுப்பினார்

**T.சஜிதன்**
**A/L 2016**

## படிப்பு சுமை அல்ல

தேர்வு காலம் வந்தாச்சு
திறமை காட்ட வாருங்கள்
பரீட்சை காலம் வந்தாச்சு
பதற்றம் சேர்ந்து வந்து விடும்

படிக்கும் நேரம் படிக்காமல்
பயனில்லாமல் ஊர்சுற்றும்
விடலை கூட்டம் சேராமல்
வெற்றிகாண் படித்திடுவோம்

நமக்கு முன்னே உயர்ந்திடும்
நம்மை போல படித்தவர்
சுமையாய் அதை எண்ணாமல்
சுவையை அதை ஏற்றிடுவோம்

அம்மா, அப்பா நினைவுகள் எல்லாம்
அருமை செல்வம் நம்மை
செம்மை எதிர்காலம் சிறப்புற
மிக்க புகழ் வாழ்க்கை

சின்னஞ் சிறு செடியே பின்னால்
செழித்த பெரிய மரமாகும்
சின்ன வயது பழக்கம் தான்
சுடலை வரை கூடவரும்


அறிவை நன்றாய் வளர்த்திடுவீர்
நாளை தலைவர் நாமென்று
நம்பிக்கையுடன் தலை நிமிர்ந்து
உயர்ந்து வழி நடப்போம்.

ஞா. வீஸ்மன்
10A

## பொதுஅறிவு

1. இலங்கையின் 45வது பிரதம நீதியரசர்?
   ஸ்ரீபவன்
2. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி?
   மைத்திரிபால ஸ்ரீசேன
3. இலங்கையின் தற்போதைய பிரதமமந்திரி?
   ரணில் விக்ரமசிங்க
4. வடமாகாணத்தின் தற்போதைய ஆளுனர்?
   பளிகக்கார
5. வடமாகாண முதல் அமைச்சர்?
   திரு. விக்கினேஸ்வரன்
6. இலங்கையின் 1வது சிறுவர் நீதிமன்றம் அமைத்துள்ள இடம்?
   பத்தரமுல்ல
7. 2014ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஆசியா பிரமுகர்?
   மலாலா ஜோசப்
8. பார்வையற்றிருந்தும் நோபல் பரிசு பெற்ற வெண்மணி?
   அலிஸ்முன்றோ(Alice Munro)
9. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்?
   கோகுலநாத்
10. இலங்கையின் தற்போதைய கல்வியமைச்சர்?
    அகிலவராஜ் காரியவசம்

J.நிபன்சிகா 11A



## அரச இலச்சினையில் உள்ள பகுதிகள் எவை?

- சிங்கம்
- பூரணகும்பம் (நிறைகலசம்)
- சூரியன்
- சந்திரன்
- நெற்கதிர்
- தர்மச்சக்கரம்
- தாமரை இதழ் அலங்காரம்

த.சஜீவனி
A/L(2016)

## அன்னை தெரேசா



அன்னை தெரேசா 1910ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 26ம் திகதி பிறந்தார். இவர் அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவரும் இந்திய குடியுரிமை பெற்ற உரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியும் ஆவார். 1950ம் ஆண்டு இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவறசபையினை நிறுவினார்.

நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழை எளியோர்களுக்கும், நோய் வாய்ப்பட்டோருக்கும் அநாதைகளுக்கும் இறக்கும் தறுவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றியவர். இவர் முதலில் இந்தியா முழுவதும் பின்னர் வெளிநாடுகளுக்கும் பிறர் அன்பின் பணியாளர் சபையினை நிறுவினார்.

1970ம் ஆண்டுக்குள் இவரை சிறந்த சமூக சேவகர் எனவும் ஏழைகளுக்கும் ஆதரவற்றோருக்கும் பரிந்து பேசுபவர் என்றும் உலகம் முழுவதும் புகழப்பட்டார்.

இவர் 1979இல் அமைதிக்கான நோபல் பரிசினையும் 1980இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரதரத்னா விருதினையும் பெற்றார். அன்னை தெரேசாவின் பிறர் அன்பின் பணியாளர் சபை அவரது இறப்பின் போது 123நாடுகளில் 610தொண்டு நிறுவனங்களை இயக்கிக் கொண்டிருந்தது. இதில் எயிட்ஸ், தொழு நோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அநாதை இல்லங்கள், பாடசாலைகள் ஆகியன அடங்கும்.
பல்வேறு நபர்கள், அரசுகள் மற்றும் அமைப்புக்கள் என பலர் இவரை புகழ்ந்து வந்தாலும், பலவிதமான விமர்சனங்களையும் இவர் சந்தித்தார். இவரின் இறப்புக்குப் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரால் முத்தி பேறு அடைந்தவராக அறிவிக்கப்பட்டு கொல்கத்தாவின் அருளாளர் தெரேசா என்று பட்டம் சூட்டப்பட்டார். இவர் 1997ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 05ம் திகதி இறைபதம் எய்தினார்.

**S. கயானா**
**A/L(2015)**

## விவேகானந்தரின் பொன்மொழிகள்



★ எந்த வேலையையும் தனது விருப்பத்துக்கு ஏற்றவாறு மாற்றுபவன் அறிவாளி

★ மலைபோன்ற சகிப்புத்தன்மை இடைவிடாது முயற்சி எல்லையற்ற நம்பிக்கை இவைதான் நற்காரியத்தில் வெற்றி தரும்.

★ நீங்கள் மகத்தான பணியைச் செய்ய பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.

★ நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல்லுங்கள். நீங்கள் உறுதியுடன் இருந்தால் பாம்பின் விடங் கூடச் சக்தியற்றதாகி விடும்

★ நெற்றியில் சுருக்கங்கள் விழட்டும், ஆனால் இதயத்தில் சுருக்கம் விழக்கூடாது, ஏனெனில் இதயம் ஒரு போதும் கிழடு தட்டக்கூடாது.

**M. தர்சனா**
**A/L(2015)**

## தேசியக் கொடி



✡ வாளேந்தியசிங்கம் / இளம்சிவப்பு: சிங்களவர்
✡ செம்மஞ்சள் : தமிழர்
✡ பச்சை : முஸ்லீம்
✡ வெள்ளரசமிலை : பௌத்தமதம்

**த.சஜீவன்**
**A/L(2016)**



# Happy Life index - மகிழ்ச்சி வாழ்க்கை சுட்டெண்

இன்றைய நாகரீக யுகத்தில் பரபரப்பான வாழ்கையும் வேலைப்பளுவும் நோய்களும் என ஒவ்வொரு மனிதனின வாழ்விலும் போராட்டமே வாழ்கையாகிவிடுகிறது. அமைதி, அன்பு, இரக்கம், விட்டுக் கொடுத்தல் ஒழுக்கம், இறைநம்பிக்கை என்பன இன்று பின்நோக்கி தள்ளப்பட்டு பணம், சொத்து, நாகரீகமோகம், சுயநலம், பொறாமை, சண்டை என்னும் பண்புகள் முன்நோக்கி சமுகத்தில், குடும்பத்தில் தலைதூக்கி இருப்பதை அவதானிக்கலாம். உளவியல் மருத்துவர்கள் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்கள் என உளவியலை மையமாக கொண்ட தொழில்முறைகள் சமுகத்தில் அதிகமாகி வருவதை அவதானிக்கமுடிகிறது. முன்னைய காலங்களைப் போன்ற கடினஉழைப்பு, கூட்டுக்குடும்பம், குருசொற்கேட்டல், சமுதாயபற்று, தேசத்தை மதித்தல் போன்ற நல்ல விடயங்கள் அரிதாகி வருகின்றன. சுயநலம், போட்டி, பழிவாங்குதல், ஒற்றுமைக்குறைவு என சமூகம் பிறழ்வான நடத்தையை நோக்கி நகர்ந்து போவதை அவதானிக்கலாம். நிம்மதி, அன்பு, மகிழ்ச்சியான வாழ்வு என்பது கனவாகி எட்டாக் கனியாக மாறுவதும் அதற்காக ஒடுவதும் என இன்று சமூகம் மாறி மாறி தனது ரூபத்தினை காட்டுகிறது.

இந்தநிலையில் ஒருவர் மகிழ்ச்சியாக வாழவிரும்பின் பின்வரும் சுட்டிகள் அடையப்படின் அவர் நினைத்த வாழ்வு கிடைத்துவிடும் என 34 நாடுகள் சேர்ந்து மகிழ்ச்சி வாழ்க்கை சுட்டென்னை தயாரித்து அதனை பெயரிட்டு இருக்கின்றன.

அவையாவன.

1. Housing (**வீடமைப்பு**)
2. Incom (**வருமானம்**)

} **Living Conditions**

3. Jobs (**தரமான வேலைவாய்ப்பு**)
4. Community - **சமுதாயம்**
5. Education - **கல்வி**
6. Environment - **சூழல் பாதுகாப்பு**
7. Civil Engagement (Governance) - **பொதுமக்களின் பங்ளிப்பு, நல்லாட்சி**
8. Health - **ஆரோக்கியம்**
9. Life Satisfaction - **வாழ்கைத்திருப்தி**
10. Safety - **பாதுகாப்பு**
11. Work - Life - Balance - **வரவுக்கேற்ற செலவு**

} **Quality of Life**

Orgaisation for Economic Cooperation and Development (OECD)

34 Countries

எனவே மகிழ்ச்சி வாழ்க்கை சுட்டெண் எண்ணில் அடங்கும் சுட்டிகளை நாமும் சரியான முறையில் அடைந்து நன்றாக வாழ்ந்து வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமைசேர்ப்போமாக.

ஆசிரியர் A. Sivaskantan (அரசியல் விஞ்ஞானம்)

**சிந்தனைச் சுடர்**

- விழி! சோர்வைக் கிழி! உன்னப்பிழி! தெரியும் ஒளி!
- கைக்குட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டது கண்ணீர் துடைக்க அல்ல வேர்வை துடைக்க
- நதி நகர்ந்து கொண்டே இருக்கிறது. பூ முளைத்துக் கொண்டே இருக்கிறது. நீ தேடிக் கொண்டே இரு.
- அடங்கி விடாதே அச்சமும், தாமதமும் உன்னை அடைக்கும் இரு அடைப்புக் குறிகள்


ஆ.விஜிதா 10A



## வங்கி வைப்புக்கள் 03 வகைப்படும்

1. சேமிப்பு வைப்பு
2. நடைமுறை வைப்பு
3. நிலையான வைப்பு

### சேமிப்பு வைப்பு மற்றும் நிலையான வைப்பு ஆகியவற்றில் பணத்தை வைப்பிலிடும் முறை




படிமுறை 01 : இலக்கம் (01) காட்டப்பட்டுள்ள இடத்தில் கணக்கு இலக்கத்தை சரியாக இடுதல் வேண்டும்.

படிமுறை 02 : இலக்கம் (02) காட்டப்பட்டுள்ள இடத்தில் பணம் வைப்பிலிடும் திகதி, மாதம், ஆண்டு என்பவற்றை இடுதல் வேண்டும்.

படிமுறை 03 : இலக்கம் (03) காட்டப்பட்டுள்ள இடத்தில் கணக்கு உரிமையாளரின் பெயர் முதல் எழுத்துடன் எழுதப்படல் வேண்டும்.

படிமுறை 04 : இலக்கம் (04) காட்டப்பட்டுள்ள இடத்தில் நாம் எவ்வளவு தொகை வைப்பிலிடப் போகிறோம் என்பதனை காட்டல் வேண்டும்.

படிமுறை 05 : இலக்கம் (05) காட்டப்பட்டுள்ள இடத்தில் பணம் வைப்பிலிடுபவரின் பெயர் இடப்படல் வேண்டும்.

படிமுறை 06 : இலக்கம் (06) காட்டப்பட்டுள்ள இடத்தில் கணக்கு உரிமையாளர் அல்லாத நபர் பணத்தை வைப்பிலிடும் போது நிரப்ப வேண்டிய பகுதி இதுவாகும்.

படிமுறை 07 : இலக்கம் (07) காட்டப்பட்டுள்ள பகுதியானது வங்கி அதிகாரிகளினால் பூர்த்தி செய்யப்படும். இப்பகுதியிலே வைப்பு செய்த கணக்கிலக்கம், தொகை என்பவற்றுடன் காசாளரின் கையொப்பம் காணப்படும்.
இதன் பிரதியினை சரிபார்த்து எடுத்து செல்லலாம்.

குறிப்பு : நிலையான வைப்பில் பணத்தை இடும் போது மேல் உள்ளவற்றுடன் தேசிய அடையாள அட்டை பிரதி மற்றும் வரி தொடர்பான விபரம் என்பவற்றினை சமர்பித்தல் வேண்டும்.

A/L - 2016(Com)

## அதிசயம்

முடிவெட்டிக் கொள்வது, நன்றாக உடை அணிவது, முகச்சவரம் செய்வது போன்ற பழக்கங்கள் அவரிடம் இல்லை, பல நேரங்களில் பெல்ட், எடுத்து சோம்பல்பட்டு கழுத்து டையையே இடுப்பில் கட்டிக்கொண்டு வெளியில் புறப்பட்டு விடுவார். அவர் வேறு யாருமல்ல விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் தான். இப்படிப்பட்டவர்கள் கடைசி 35 ஆண்டுகள் எந்த நேரமும் ஆராய்ச்சிக் கூடத்திலேயே முழுக்கவனத்துடன் இருந்தார் என்பது ஆச்சரியமானது.

ம.தர்சனா

A/L 2015

## பொது அறிவு

1. ஹமீத் கர்சாய் என்பவர் ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியாவார். அவ்வாறே, ஹமீத் அன்சாரி என்பவர் யார்?

    இந்தியாவின் உபஜனாதிபதி

    இரண்டாவது முறையும் 2012இல் இப்பதவிக்குத் தெரிவானார்.

2. ஹேமமாலாவும் நந்தகுமாரனும் எனும் புகழ்பெற்ற ஓவியத்தை வரைந்தவர் யார்?

    சோளியஸ் மெண்டிஸ்

3. ரோம இலக்கங்களில் குறிக்க முடியாத முக்கியமான எண் எது?

    “0”

4. Politics அரசியல் என்ற நூலின் ஆசிரியர் யார்?

    அரிஸ்டோட்டில்

5. சீன ஜனாதிபதியின் பெயர் என்ன?

    ஸி ஜின்டிங்க

6. இலங்கையின் ~~இறுதி~~ வது ஆளநர் யார்?

    ஹென்றி மேசன் மூர் (1944 - 1948)

7. 23 ஆவது பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெற்றது. 24 ஆவது மாநாடு எங்கு நடைபெறவுள்ளது?

    மால்டா

## கனிப்பொருட்களும் அவை அமைந்துள்ள இடமும்

| | |
|---|---|
| 1. கண்ணாடி | - நாத்தாண்டியா |
| 2. ஒட்டுப்பலகை | - ஜின்தோட்டை |
| 3. ரயர் ரீப்பு | - களனி, களுத்துறை |
| 4. கட்டிப்பால் | - பொலநறுவை |
| 5. எண்ணைசுத்திகரிப்பு | - சப்புகஸ்கந்த |
| 6. ஒடு | - ஒட்டிசுட்டான், நாத்தாண்டியா, சிலாபம், நீர்கொழும்பு |
| 7. உருக்கு இரும்பு | - ஒருவெல |
| 8. இல்மனைட் சுத்திகரிப்பு | - புல்மோட்டை |
| 9. கடதாசி தொழிற்சாலை | - வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டியா |
| 10.சீமெந்து தொழிற்சாலை | - காங்கேசன்துறை, புத்தளம் |
| 11. சீனித்தொழிற்சாலை | - கந்தளாய், ஹிங்குராணை, பெலவத்தை |

வாரணி A/L 2016

## படித்ததில் பிடித்தது

### பெண்ணே எதைத் தேடுகிறாய்?........

பெண்ணே எதைத் தேடுகிறாய்
நீ இழந்ததையா?
தேடிக் கொண்டேயிரு

உனது வளர்ச்சியை
எண்ணிக் கலங்கவில்லை
உனது நிலையை
எண்ணி ஏங்குகிறாயா?

நாகரீக மோகத்தில் தொலைந்த உனது
முகவரியை புதுப்பித்து
நடை பயில எழுந்து வா
பெண்ணே


மென்மையில்லாத பெண்மை
உயிரற்ற பொம்மை போன்றது
உனது இதயக் கதவை
ஒருமுறையாவது திறந்து
பார் பெண்ணே
நீ உடுத்தும் உடையில்
தமிழ்ப்பண்பாடு
எங்கே போனது?
கண்ணில் பூசும் மை
உதட்டில் பூசும் சாயம்
இவை உனது அழகின்
தோற்றக் கானல்களே

பெண்ணே! கண்களில் கருணை
உதட்டில் புன்னகை
கனிவான வார்த்தை
இவை பெண்மைக்கேயுரித்தான
இறைவனின் கொடை

அதைப் புரிந்தும்
புரியாதது போல
நாகரீக மோகத்தில் – உன்னைத்
தொலைத்துவிட்டு – பெண்ணே
எதைத் தேடுகிறாய்

து.நிபன்சிகா –11A

## உங்களுக்கு தெரியுமா?



- உலகப் புகழ்பெற்ற டைம்ஸ் பத்திரிகையின் அட்டையை அலங்கரித்த முதல் நடிகர் சார்லி சாப்ளின்
- உலகின் மிக நீண்ட கவிதை மகாபாரதம் 3,000,000 சொற்களைக் கொண்டது.
- பத்திரிகையில் விளம்பரம் செய்யும் வழக்கம் 1647ம் ஆண்டு தொடங்கியது.
- காட்டு விலங்காய் கட்டுக்கடங்காமல் சுதந்திரமாய் திரிந்த குதிரைகள் கி.மு 4400முதல் தான் மனிதர்களின் வீட்டு விலங்காக பயன்பாட்டுக்கு வந்தது.
- உலகின் மிக குறகிய காலப் போர் இங்கிலாந்திற்கும் ஜான்ஸிபாருக்குமிடையே 1896ம் ஆண்டு நடந்த போராகும். இந்தப்போரில் ஜான்ஜியர் 38நிமிடங்களில் இங்கிலாந்திடம் சரணடைந்தது.

இ.வைஸ்ணவி10A

## மீனவன் படும் துயர்கள்

ஒரு பிடி உணவுக்கு கைபிடிச் செலவுக்கு
உயிரை முதலாய் வைக்கும் மீனவா!
அதிகாலை உணவைத் துறந்துவிட்டு
உயிர்பயம் என்ற சொல்லை காற்றில் திறந்துவிட்டு
விபரீதம் என்று தெரிந்தும் விளையாட்டாய் ஈடுபடுவான்.

மனைவி பிள்ளைகள் பசிக்கொடுமையால் வாட
நடுக்கடலில் அவன் மனம் வீட்டைத்தேட
எத்தனையோ மீனவன் வாழ்வில்
வருடத்தில் பாதிநாள் இரவுணவு ஈரத்துணியாய் மாற
மீனவன் படும் துயர்களை என்வாயால் எவ்வாறு கூற

முரல் மீன் இனத்தின் கூரிய நீண்ட உதடுகளால்
துளைக்கப்பட்டன அவனின் இருதயக்கதவுகள்
அங்குகடலில் அழிக்கப்பட்டது அவன் உயிர்மட்டுமல்ல
அவன்மனைவியின் தாலிபறிக்கப்பட்டது குங்குமம் அழிக்கப்பட்டது
காலம் மாறினாலும் இன்னும் இவர்களின் கோலம் மாறவில்லை

ஐயோ! என்று குளறி அழவும் இயலாது நிற்கும் பெண்கள்
படகில் கணவனைக் கண்டவுடன் ஆணந்தத்தில் அவள்சிவக்டும் கண்கள்
உயிர்காத்தகடல் உயிர்பறிக்க உருவெடுக்க
இவர்கள் வாழ்வில் வெந்தபுண்ணில் வேல்பாயுமப்பா!
அதை நினைத்தால் கண்ணில் நீரோடுமப்பா

**சி.அஜந்தன் 10A**

## இல்லாதவை

- ஆபிரிக்காவில் புலிகள் இல்லை
- ஈசலுக்கு வயிறு இல்லை
- ஈக்களுக்கு பற்கள் இல்லை
- சுண்டெலிக்கு வியர்வை இல்லை
- வெளவாலுக்கு பார்வை இல்லை
- வண்ணத்துப் பூச்சிக்கு வாய் இல்லை
- மண்ணுண்ணிப் பாம்புக்கு கண் இல்லை
- நண்டுக்கு தலை இல்லை

**A.தட்சாயினி A/L2016**



## விடுகதைகள்

1. ஊரைக் கண்டால் பாயும் கொள்ளி நீரைக்கண்டால் பயந்தாங்கொள்ளி அவன் யார்? **நெருப்பு**
2. பச்சைப் பெட்டகத்துக்கு சிவப்புக் கதவு அது என்ன? **கிளி**
3. ஒட்டு வீட்டைத் தாண்டி ஒடமுடியாச் சோம்பேறி அவன் யார்? **ஆமை**
4. வல்லவன் வாலும் வாளாக மாறும் அது என்ன? **தேள்**
5. அன்றாடம் தீப்பிடித்தும் அழியாத வீடு அது என்ன? **அடுப்பு**
6. குதிரையோ கறுப்பு, குளிப்பாட்ட வெளுப்பு, அது என்ன? **உழுந்து**
7. வெள்ளைக் கிணத்தில் கறுப்புக் கோலிக்காய் அது என்ன? **கண்**

**ஆ.விஜிதா 10A**

## பருவகாலம் கூறும் பழமொழிகள்

- தை பிறந்தால் வழி பிறக்கும்
- மாசிப்பனி மூசிப் பெய்யும்
- பங்குனி மாத வெயில் படையில் கலங்கும்
- சித்திரை மாத வெய்யில் பத்தரை மாற்றுத் தங்கம்
- வைகாசி மழையில் வாழை பெருகும்
- ஆனி அரை ஆறு, ஆடி முழு ஆறு
- ஆடிக்காற்று அம்மியையும் தூக்கும்
- ஆவணி மேகம் தாவணி போடும்
- புரட்டாதி மாத வெய்யில் பொன்னுருகக்காயும் மண்ணுருகப்பெய்யும்.
- ஐப்பசி அடைமழை கார்த்திகை கனமழை
- கார்த்திகைக்கு பின் மழையும் இல்லை கர்ணனுக்குப் பின் கொடையும் இல்லை
- மார்கழி பனியில் பச்சையும் துளிர்க்கும்

**ஆ.விஜிதா 10A**

## சத்தியம் சாகடிக்கும்

சாத்தியம் இல்லாமல்
கொடுக்கப்படும் சில
சத்தியங்கள் சாட்சிகள்
இல்லாமல் சாகடிக்கப்படுகிறது.........

சந்தர்ப்பத்தால் தரப்படும்
சத்தியங்கள் சங்கடங்கள்
எழுந்தும் சத்தமே
இல்லாமல் செத்துப்போகிறது........

உணர்வுகளின் உச்சத்தில்
தரப்படும் சத்தியங்கள்
உத்வேகம் இல்லாமல்
உடன்கட்டை ஏறிப்போகிறது......

சபதம் எடுப்பதற்காய்
செய்யப்படும் சத்தியங்கள்
கவனம் எழுந்ததும்
சங்கடப்படாமல் மரித்துப் போகிறது.......

நிதர்சனம் இல்லா
நேரத்தில் தரப்படும்
சத்தியங்கள் நிச்சயம்
நிற்கதியற்று நிர்மூலமாகிவிடுகிறது............

கோபத்தில் செய்யும்
சத்தியங்கள் சிலரின்
சாபத்தால் என்னவோ
சவக்குழி தேடிப்போய்விடுகிறது...........

சத்தியங்கள் சாகடிக்கப்படும் போது
சாவகாசமாகவே இன்னும்
சொல்லிக் கொள்கிறேன்
சத்தியம் சாகடிக்கும் என்று.............

**துளசிகா**
**A/L 2016**

## விஞ்ஞானியின் பணிவு

அமெரிக்க விஞ்ஞானி சேர் ஐசாக் நியூட்டன் பூமிக்குப் புவிச்சார்பு சக்தி என்பதைக் கண்டுபிடித்தார். அதற்காக நோபல் பரிசும் பெற்றார். இவர் ஒரு சமயம் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தபோது அவரைப் பார்க்க நண்பர் ஒருவர் வந்திருந்தார்.அவர் அங்கிருந்த அறைக் கதவில் வட்டாமாகப் பெரியதும், சிறியதுமான இரண்டு துவாரங்கள் இருப்பதைப் பார்த்தார். அறைக் கதவில் இரண்டு துவாரங்கள் போட்டிருக்கிறீர்களே, அது எதற்கு என்று நியூட்டனிடம் கேட்டார் அவர். அதற்கு விஞ்ஞானி சொன்னார். நான் சிறியதும், பெரியதுமான இரண்டு பூனைகள் வளர்க்கிறேன். நான் வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே போய் விட்டால் பெரிய துவாரம் வழியாக பெரிய பூனையும், சிறிய துவாரம் வழியாகச் சிறிய பூனையும் அறைக்குள் வருவதற்காகவே, இந்த இரண்டு துவாரங்கங் களையும் போட்டிருக்கிறேன் என்றார். இதற்கு இரண்டு துவாரங்கள் தேவையில்லையே? பெரிய துவாரம் வழியாகவே இரண்டு பூனைகளும் வந்து விடலாமே என்று நண்பர் கூறியதும், விஞ்ஞானி திடுக்கிட்டார். ஆமாம் நீங்கள் சொல்வது சரிதான் எனக்கு இந்த யோசனையே தோன்றவில்லையே என்றவர் சிறிய துவாரத்தை அடைக்கச் சொன்னார்.

**க.கிருக்ஷாந்தினி**
**A/L 2015**

## ஞாபகத்தில் இருக்கவேண்டியது

| | |
|---|---|
| ✪ நம்பக்கூடாதது | - வதந்தி |
| ✪ ஆபத்தை விளைவிப்பது | - அதிகபேச்சு |
| ✪ செய்யக்கூடாதது | - நம்பிக்கைத்துரோகம் |
| ✪ செய்யக்கூடியது | - உதவி |
| ✪ விலக்க வேண்டியது | - சோம்பேறித்தனம் |
| ✪ உயர்விற்கு வழி | - உழைப்பு |
| ✪ நழுவிடக்கூடாது | - வாய்ப்பு |
| ✪ மறக்கக் கூடாது | - நன்றி |
| ✪ பிரியக்கூடாதது | - நட்பு |

**அ.அனுசாளினி** A/L 2015

## அட அப்படியா.......?

- மனித உடலிலேயே மூக்கின் நுனிதான் மிகவும் குளிர்ச்சியான பாகம்
- யூதர்களின் கலண்டரில் முதல் மாதம் செப்டெம்பர்
- கண்ணாடியால் சாலைகள் போட்ட நாடு ஜேர்மனி
- உலகில் 50% மேற்பட்ட மக்கள் விரும்பும் நிறம் சிவப்பு
- உடலில் இரத்தம் பாயாத பகுதி கருவிழி
- நாம் பிறந்த பின் உடலில் வளராமல் இருக்கும் உறுப்பு கருவிழி
- ஈயால் மணிக்கு 7கீ.மீ வேகத்தில் பறக்க முடியும்
- ஒரே ஆண்டில் 7புலிட்சர் விருதுகளை வென்ற அமெரிக்க பத்திரிகை நியூயோர்க் டைம்ஸ்
- நின்றபடி அடைகாக்கும் பறவை பெங்குயின்
- உலகில் மிகவும் உயர்ந்த பாலைவனம் சிலியில் உள்ள அடகாமா

**P.கேசினி A/L 2015**

## அம்மா

அம்மா என்று சொல்லும் போது எமது மனமானது அடையும் புளகாங்கிதம் சொல்லி விபரிக்க முடியாது. இறைவனால் எமக்களிக்கப்பட்ட விலைமதிப்பற்ற அன்பளிப்பு அம்மா அம்மா இறைவனை விட மேலானவர். உண்மைதான் அம்மா எம்மிடம் நேரில் நின்று பேசும் ஒரு உன்னத ஆத்மா போன்றவர். இப்படியான அம்மாவை எமக்களித்த இறைவனுக்கு நாம் ஒவ்வொருவரும் நன்றி உடையவராக இருத்தல் வேண்டும். எம்மைப்பத்துமாதம் தனது கருவறையில் சுமந்த அம்மாவை நிதமும் அவரது திருப்பாதம் தொட்டு வணங்கினால் எமது வாழ்க்கை பிரகாசமானதாக திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அம்மா என்றால் அன்பு ஆம் அம்மாவின் அன்பு வற்றாத ஜீவநதி போன்றது. அம்மாவிடம் அன்பு பாராட்டாதவன், இறைவனிடம் அன்பு வைப்பது விழலுக்கு இறைத்த நீர் போல ஆகம். அம்மாவின் அன்பு என்பது எமக்கு கிடைத்த விலைமதிப்பற்ற ஒரு பொக்கிஷம். இந்த அன்பின்பிடியில் வாழ்பவனுக்கு எல்லாமே வெற்றி தான். எவன் ஒருவன் அம்மாவிற்கு முதலிடம் அளிக்கிறானோ அவன் தன்வாழ்விலும் முதன்மைநிலையை அடைவான் என்பது கற்றறிந்த பெரியோரின் கருத்து அம்மாவிடம் அன்பு மட்டுமா? பாசம், கருணை என்பனவும் அந்த வற்றாத ஜீவநதியில் இருந்து தான் உருவாகின்றன. அம்மா என்றால் அன்பு, பாசம், கருணை, அமைதியின் வடிவம் என்று இப்படியா அம்மாவின் பெருமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்........

**சி.துளசிகா 10A**

## படித்ததில் எனக்குப் பிடித்தது

தடை அது படைபலம் எதிரி உன்
முதற்படி
தடைகள் பல வாழ்வில
தாண்டிக் குதி எதிரில்
எதிரிகள் பல நம் எதிரில்
எதிர்த்து நில் விரைவில்

திண்ணிய நெஞ்சத்துடன் உன்
தீமைகளை இறுதியாக
அகற்றிவிடு
திடசங்கற்பம் பூண்டிடு - எதிரி
மனதை எதிர்த்துப் போரிடு

ஈட்டி மார்பைக் கிழித்தாலும்
இலைகள் உதிர்வதால்
உணர்வுகள்
உதிர்ந்து பின் முளைக்கும்
உணரவை உற்று நோக்கு மனிதா

தடை என்பதை - உன்
படை பலமாக்கு
எதிரி என்பதை - உன்
முன்னேற்றத்தின் -
முதற்படியாக்கு
இதுவெ தடை அதுபடை
எதிரி அது உன் முன்னேற்றம்

**சு.சயந்தன் 10A**

## 1ம் பராக்கிரமபாகு

- மானாபரண மன்னனுக்கும் இரத்னவலி அரசிக்கும் மகனாக தக்கிண தேசத்தின் கேகாலைப் பகுதியில் "தெடிகம எனும் கிராமத்தில் பிறந்தான்
- இவனது சிறு பிராயத்திலேயே தந்தை காலமானார்
- இவனது தந்தையின் சகோதரர்களான ஸ்ரீபல்லவ,கீர்த்தி ஸ்ரீ மேக போன்றோரின் உதவியுடன் வளர்ந்தான்
- தனது சிறிய தந்யையான கீர்த்தி சிறிமேகனின் மறைவின் பின் தக்கிண தேசத்தின் ஆட்சியாளனாக 1ம் பராக்கிரமபாகு மன்னன் அரசியலில் அடியெடுத்து வைத்தான்
- தக்கிண தேசத்தில் தனது ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டி பராக்கிரமபுர எனும் தலைநகரில் ஆட்சி செய்தான்
- இவன் தக்கிணதேசம், இராசரட்டை, உருகுண போக்ற பிரதேசங்களைக் கைப்பற்றி முழு நாட்டின் அரசனானான்
- 1ம் விஜயபாகுவின் பின் நாட்டை ஒன்றுபடுத்தி ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்த மன்னன் இவனாவான்
- இவரின் ஆட்சிக் காலத்திலேயே இலங்கை கிழக்கின் தானியக் களஞ்சியம் என வர்ணிக்கப்பட்டது.
- "என்னுடைய இராசதானியில் எந்தவோர் இடத்திலும் விவசாயத்திற்கும் பயன்படாத சிறுநிலமேனும் இருக்கக்கூடாது" என சூளவம்சத்திலும் "வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்திற்குப் பயன்படுத்தாது வீணே கடலை சென்றடைய விடமாட்டேன;" என்பதும் இவரது கூற்றாகும்.
- பிளவுபட்ட பௌத்த சமயத்தை ஒன்றுபடுத்தி பல விகாரைகளைக் கட்டிய இவன். பொலனறுவை அரசனான பின் தோபாவாவி, தும்புளுவாவி, எரபது வாவி, கொக்காவாவி முதலிய குளங்களை இணைத்து மிக விலாசமான பராக்கிரம சமுத்திரத்தை அமைத்தான். இதே போன்று 1ம் பராக்கிரமபாகு இலங்கைக்காற்றிய பணி அளப்பரியது. இப்படியான மன்னர்களை என்றுமே நாம் மறத்தலாகாது.

**ம. லிந்துஷா 10A**